# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 200/பேரூ/2024**

**நாள்: 08.04.2025**

திரு. S. ராஜன்,
மண்ணச்சநல்லூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
தொட்டியம் தேர்வுநிலை பேரூராட்சி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். – எதிர் மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், 3/2 நமச்சிவாய நகர் முதல் தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. எஸ். ராஜன் என்பவரின் 26.10.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.10.2024 அன்று பெறப்பட்டு 200/பேரூ/2024 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், 3/2 நமச்சிவாய நகர் முதல் தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. எஸ். ராஜன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் வட்டம், தொட்டியம் தேர்வுநிலை பேரூராட்சியில் 23.03.2020 முதல் 02.09.2021 வரை Lizal கிருமிநாசினி வாங்கிய பட்டியலில் கண்ட விவரப்படி கிருமிநாசினி வாங்கப்படவும் இல்லை. பயன்படுத்தவும் இல்லை. பட்டியலில் Golden Agency, Trichy என்ற நிறுவனத்திற்கு மட்டும் 4/2020 மாதத்திலிருந்து 9/2021 வரை உள்ள காலத்தில் கிருமிநாசினி வாங்கியதாக ரூ.12,29,741/– கொடுக்கப்பட்டுள்ளதாக பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தின் முழுமுகவரி அளிக்கப்படவில்லை. Tvl. வி.வி. டிரேடர்ஸ், காட்டூர்,

திருச்சி–19 என்ற நிறுவனத்திடமிருந்து ரூ.50,000/–க்கும் கோல்டன் ஏஜென்சீஸ் நிறுவனத்திடமிருந்து ரூ.12,29,741/–க்கும் லைசால் கிருமி நாசினி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. V.V. டிரேடர்ஸ் GST எண் அளிக்கப்படவில்லை. இதிலிருந்து இந்த நிறுவனம் செயல்படாத மற்றும் GST–ல் பதிவு செய்யப்படாத நிறுவனம் என்றும் போலியானது என்றும் தெரிய வந்துள்ளது. பட்டியலில் குறிப்பிட்ட கொள்முதல் அளவிற்கு நிறுவனத்திடம் இருப்பு இருந்துள்ளதா என்பது குறித்து நிறுவனத்தின் இருப்புப் பதிவேடு முதலானவற்றை தணிக்கை செய்ய வேண்டும். இந்த செலவு குறித்து உரிய அனுமதி சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகளிடமிருந்து செயல் அலுவலரால் பெறப்பட்டதாக தெரியவில்லை. கிருமி நாசினியை பயன்படுத்தியது குறித்து விதிமுறைகளின்படி போட்டோ எடுக்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட ஆவணங்களை அலுவலகத்தில் ஆய்வு செய்தால் உண்மை நிலை தெரியவரும். அதனால் கிருமிநாசினி வாங்காமலேயே அரசு நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது. அதனால் இந்த மோசடி குறித்து சம்பந்தப்பட்ட செயல் அலுவலர், துப்புரவு ஆய்வாளர், தலைமை எழுத்தர் ஆகியோரை தற்காலிக பணி நீக்கம் செய்து உடனடியாக விசாரணை மேற்கொள்ளும்படியும், தற்காலிக பணி நீக்கம் செய்யாமல், விசாரணை மேற்கொண்டால் ஆவணங்களை திருத்தம் செய்து தப்பிக்க வழி வகுக்கும் என்பதையும் குறிப்பிட்டு கீழ்க்கண்ட முகவரி அலுவலர்களுக்கு 23.06.2022 அன்று விண்ணப்பம் கொடுத்தேன்.

(1) பேரூராட்சிகளின் இயக்குநர், பேரூராட்சிகளின் ஆணையரகம், நகர் நிர்வாக அலுவலக வளாகம், 7வது தளம், எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.
(2) Commissioner of Commercial Taxes, 4th floor, Exhilagam Building, Kamarajar Road, Chepauk, Chennai-5.
(3) Commissioner GST, 26/1, GST Bhavan, Chennai-600 034.
(4) Joint Commissioner of Commercial Taxes, PAP JM Building, Greams Road, Chennai-600 006.

என்னுடைய விண்ணப்பத்தின்பேரில் இணை ஆணையர் (மா.வ) (நுண்ணறிவு), வணிகவரித் துறை, திருச்சி–18 என்ற முகவரி அலுவலரின் ந.க. எண்.3078/2021/அ3 நாள் 29.05.2023 கடிதத்தில் முதன்மை செயலர் / வணிகவரி ஆணையர், எழிலகம், சேப்பாக்கம், சென்னை–5 என்ற முகவரி அலுவலருக்கு அறிக்கை அனுப்பியுள்ளார். இணை ஆணையரின் கடிதத்தில் பட்டியலில் கண்ட வணிகர்களின் பெயரில் சரக்கு மற்றும் சேவைவரி இணையதளத்தில் விற்பனை நமூனாக்களை பரிசீலனை செய்ததில் கீழ்க்கண்ட வணிகர்கள் யாரும் தொட்டியம் தேர்வுநிலை பேரூராட்சிக்கு 01.01.2019 முதல் 18.10.2021 வரை லைசால் கிருமிநாசினி ஏதும் விற்பனை செய்யவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ. எண். | வணிகரின் பெயர் | பதிவுச்சான்று எண் | முகவரி |
|---|---|---|---|
| 1. | கோல்டன் ஏஜென்ஸி | 33AABPR2332P1ZM | 10-A/1, Kajamoideen Street, Palakarai, Tiruchirappalli, Tamil Nadu-620 008. |
| 2. | கோல்டன் ஏஜென்ஸி | 33AIXPP0615P1ZN | 81, NA Madurai Road, Tiruchirappalli, Tamil Nadu-620 008. |
| 3. | கோல்டன் ஏஜென்ஸி | 33ANTPP8793M1ZS | 12, Rail Co-op Mansion, Dindigul Road, Tiruchirappalli, Tamil Nadu-620 001. |

மேலும், வி.வி. டிரேடர்ஸ், காட்டூர், திருச்சி–19, கோல்டன் ஏஜென்ஸி, திருச்சி என்ற வணிகர்களின் விற்பனை விவரத்தினை சரக்கு மற்றும் சேவை வரிச் சட்ட இணையதளத்தில் கண்டறிய இயலவில்லை என்றும் புகாரில் கூறியுள்ள வணிகர்களின்பேரில் மேல் நடவடிக்கை தொடர சரியான விளக்கம் கிடைக்கும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்கலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இணை ஆணையரின் கடிதத்திலிருந்து தொட்டியம் பேரூராட்சி பொதுத் தகவல் அலுவலர் / செயல் அலுவலரின் ந.க. எண்.591/2021 நாள் 16.11.2021 கடிதத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ள லைசால் கிருமி நாசினி ரூ.12,29,741/–க்கு சப்ளை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள வணிகர்களின் பட்டியல் போலியானது என தெரிய வந்துள்ளது. இதனால் போலி முகவரி, போலியான GST மூலம் வரி ஏய்ப்பு செய்யப்பட்டுள்ளது. அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. அரசு பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து என்னுடைய 23.06.2022ந் தேதிய மனுவில் கூறப்பட்டுள்ள புகார் ருதுவாகியுள்ளது. அதனால் இந்த மோசடி குறித்து சம்பந்தப்பட்ட செயல் அலுவலர், துப்புரவு ஆய்வாளர், தலைமை எழுத்தர் ஆகியோரை தற்காலிக பணி நீக்கம் செய்து உடனடியாக விசாரணை மேற்கொள்ளும்படியும், தற்காலிக பணி நீக்கம் செய்யாமல், விசாரணை மேற்கொண்டால் ஆவணங்களை திருத்தம் செய்து தப்பிக்க வழிவகுக்கும் என்பதையும் தெரிவித்து 25.04.2024 அன்று (1) பேரூராட்சிகளின் இயக்குநர், பேரூராட்சிகளின் ஆணையரகம், நகர் நிர்வாக அலுவலக வளாகம், 7–வது தளம், எம்.ஆர்.சி. நகர், சென்னை–28 (2) மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி–620 001, (3) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருச்சிராப்பள்ளி மண்டலம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகம், திருச்சிராப்பள்ளி–620 001, (4) இணை ஆணையர் (மா.வ) (நுண்ணறிவு), வணிக வரித் துறை, திருச்சி கோட்டம், திருச்சிராப்பள்ளி–620 018, (5) செயல் அலுவலர், தொட்டியம் தேர்வுநிலை பேரூராட்சி, தொட்டியம் அஞ்சல், தொட்டியம் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்–621 215 ஆகியோருக்கு மனு கொடுத்தேன். அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அரசாணை எண்.228 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 16.09.1997–ன்படி ரூ.10,000/–க்கு மேல் பெறுமானமுள்ள பட்டியல் தொகைக்கு ஏற்ப பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் மேலொப்பம் பெற்று சில்லறை செலவினங்கள் மேற்கொள்ள வேண்டும். ஆனால் அரசாணையின்படி உதவி இயக்குநரின் ஒப்புதல் பெறப்படவில்லை. இதனை அலுவலக தணிக்கையின்போது உதவி இயக்குநர் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால் இந்த ஊழலுக்கு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் உடந்தையாக இருந்துள்ளார்.

ஆகையால் இந்த மோசடி குறித்து சம்பந்தப்பட்ட திருச்சிராப்பள்ளி மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர், செயல் அலுவலர், துப்புரவு ஆய்வாளர், தலைமை எழுத்தர் ஆகியோரை தற்காலிக பணி நீக்கம் செய்து மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு காவல் துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளும்படியும், தற்காலிக பணி நீக்கம் செய்யாமல், விசாரணை மேற்கொண்டால் ஆவணங்களை திருத்தம் செய்து தப்பிக்க வழி வகுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகையால் இந்த புகார் குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு அதன் விவரத்தை தெரிவிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்."

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 07.11.2024 நாளிட்ட அறிவிப்பின் மூலம் தொட்டியம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. தொட்டியம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 26.11.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

“திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூரைச் சார்ந்த திரு. ச. ராஜன் த/பெ சஞ்சீவி என்பவர் கோரிய தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 ன் படியான தகவல்களுக்கு, தொட்டியம் தேர்வுநிலை பேரூராட்சி அலுவலத்தின் 16.11.2021 நாளிட்ட கடிதம் வழி தகவல்கள் பதிவு அஞ்சல் மூலம் மனுதாரருக்கு வழங்கப்பட்டது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், மேற்படி மனுதாரர் திருச்சிராப்பள்ளி மண்டல பேரூராட்சி உதவி இயக்குநரிடம் இப்பேரூராட்சியில் வழங்கப்பட்ட தகவல்களுக்கு மேல்முறையீடு செய்யப்பட்டதற்கு, மனுதாரருக்கு மேற்கண்ட பேரூராட்சியால் 16.11.2021 நாளிட்ட கடிதத்தில் ஏற்கனவே வழங்கப்பட்ட தகவல்களின் நகலினையே மீளவும் வழங்கப்பட்டது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறான நிலையில் மனுதாரரால் எற்கனவே தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரப்பட்டிருந்த தகவல்களின் வரிசை எண்.4–ல் Lyzol கிருமிநாசினி கொள்முதல் குறித்து கோரப்பட்டு இருந்த தகவல்களுக்கு இப்பேரூராட்சியில் வழங்கப்பட்ட தகவல்களையே இம்முறை மன்ற நடுவத்திற்கு புகாராக குறிப்பிட்டு அனுப்பியுள்ளதற்கு எனது பதிலினை பின்வருமாறு பணிவுடன் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் தேர்வுநிலை பேரூராட்சி பகுதியானது 15 வார்டுகளும் 102 தெருக்களும் மற்றும் இப்பேரூராட்சி பகுதியை ஒட்டியுள்ள தோளூர்ப்பட்டி கிராம ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வாழும் மக்களை கொடிய உயிர் கொல்லி கொரோனா வைரஸ் தொற்று பரவலை தடுத்து இப்பகுதி மக்களின் உயிர்களை காத்திட G.O. (D) No.391 Helath and Family Welfare (P2) Department dated 24.3.2020, G.O. (Ms) No.201 Revenue and Disaster Management (DM-II) Department dated 21.4.2020 and G.O. (Ms) No.210 Revenue and Disaster Management (DM-II) Department dated 27.4.2020 ஆகிய அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறும், சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை 2 ந.க. எண் 004/20250/இ3 நாள் 18.03.2020–ன்படி தெரிவித்துள்ளவாறும் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திருச்சிராப்பள்ளி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகள் மற்றும் காணொலி காட்சி ஆய்வுக் கூட்ட அறிவுரைகளில் தெரிவித்துள்ளவாறும், தொட்டியம் தேர்வுநிலை பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.404 நாள் 24.03.2020–ன்படி கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காக Lyzol கிருமிநாசினி வி.வி. டிரேடர்ஸ் காட்டூர், திருச்சிராப்பள்ளி மற்றும் கோல்டன் ஏஜென்சீஸ், திருச்சிராப்பள்ளி நிறுவனங்களிடமிருந்து கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரப்படி வாங்கி மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறான பகுதிகள் இப்பேரூராட்சி பகுதியில் உள்ள குடியிருப்பு வீடுகள், அரசு அலுவலகங்கள், மருத்துவமனைகள், பெட்ரோல் பங்குகள், தொட்டியம் வழியே செல்லும் பேருந்துகள் டேங்கர் லாரிகள், மின்கல வாகனங்களில் ஸ்பிரேயர் மூலம் Lyzol கிருமிநாசினி தெளிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதையும், இப்பேரூராட்சி மன்றத்தில் ஒவ்வொரு மாத கூட்டத்திலும் கீழ்க்காணும் விவரப்படியான செலவினங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | பட்டியல் எண்/நாள் | கொள்முதல் அளவு (மீட்டரில்) | தொகை ரூ. | காசோலை எண் / தேதி | இப்பேரூராட்சி மன்ற அங்கீகார தீர்மானம் எண். / நாள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | V.V. Traders, Kattur, Trichy-19 | VV T19-20-T 243/23.03.2020 | 150 | 30,000 | 081601 30.04.2020 | 416 / 30.04.2020 |
| 2 | V.V. Traders, Kattur, Trichy-19 | VV T19-20-T 252/24.03.2020 | 100 | 20,000 | 125972 04.05.2020 | 441 / 22.06.2020 |
| 3 | Golden Agency, Trichy | GA-GST-003 03.04.2020 | 400 | 79,999 | 081603 30.04.2020 | 416 / 30.04.2020 |
| 4 | Golden Agency, Trichy | GA-GST-007 15.04.2020 | 400 | 79,999 | 125979 06.05.2020 | 441 / 22.06.2020 |
| 5 | Golden Agency, Trichy | GA-GST-011 24.04.2020 | 400 | 59,999 | 125989 08.05.2020 | 441 / 22.06.2020 |
| 6 | Golden Agency, Trichy | GA-GST-016 06.05.2020 | 500 | 99,999 | 614973 26.05.2020 | 441 / 22.06.2020 |
| 7 | Golden Agency, Trichy | GA-GST-037 25.05.2020 | 250 | 50,000 | 349255 25.06.2020 | 451 / 06.07.2020 |
| 8 | Golden Agency, Trichy | GA-GST 27.06.2020 | 500 | 99,999 | 349313 08.07.2020 | 462 / 14.08.2020 |
| 9 | Golden Agency, Trichy | GA-GST-064 15.07.2020 | 500 | 99,999 | 349346 03.08.2020 | 473 / 18.09.2020 |
| 10 | Golden Agency, Trichy | GA-GST-082 10.08.2020 | 500 | 99,999 | 403321 28,08.2020 | 473 / 18.09.2020 |
| 11 | Golden Agency, Trichy | GA-GST-100 10.09.2020 | 500 | 99,999 | 403335 28.09.2020 | 488 / 07.10.2020 |
| 12 | Golden Agency, Trichy | GA-GST-116 10.10.2020 | 500 | 99,999 | 081629 29.10.2020 | 509 / 24.11.2020 |
| 13 | Golden Agency, Trichy | GA-GST-142 04.11.2020 | 45 | 9,000 | 403390 13.11.2020 | 524 / 23.12.2020 |
| 14 | Golden Agency, Trichy | GA-GST-147 05.11.2020 | 45 | 9,000 | 492413 17.11.2020 | 524 / 23.12.2020 |
| 15 | Golden Agency, Trichy | GA-GST-147 08.03.2021 | 45 | 9,000 | 584986 08.03.2021 | 571 / 24.05.2021 |
| 16 | Golden Agency, Trichy | GA-GST-240 09.03.2021 | 10 | 2,000 | 585004 08.03.2021 | 571 / 24.05.2021 |
| 17 | Golden Agency, Trichy | GA-GST-242 10.03.2021 | 45 | 9,000 | 585034 15.03.2021 | 571 / 24.05.2021 |
| 18 | Golden Agency, Trichy | GA-GST-024 18.05.2021 | 600 | 99,000 | 638138 21.06.2021 | 610 / 15.07.2021 |
| 19 | Golden Agency, Trichy | GA-GST-051 25.06.2021 | 500 | 82,500 | 652431 06.08.2021 | 641 / 23.09.2021 |
| 20 | Golden Agency, Trichy | GA-GST-064 27.07.2021 | 550 | 90,750 | 652490 27.08.2021 | 641 / 23.09.2021 |
| 21 | Golden Agency, Trichy | GA-GST-077 02.09.2021 | 300 | 82,500 | 700478 08.10.2021 | 41 / 29.11.2021 |

மேலும் மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள வி. வி. டிரேடர்ஸ், காட்டூர் என்ற நிறுவனத்தின் GST No:GSTIN/UIN: 33BP APS4342K1ZU கடந்த **18.10.2018** முதல் நாளது வரை பயன்பாட்டில் உள்ளது என்பதையும் இதற்கான நகலினையும் சமர்ப்பித்துள்ளேன். இப்பேரூராட்சிக்கு தேவையான பொது சுகாதாரப் பொருட்கள்

சப்ளை செய்வதற்கு 2021–2022–ம் ஆண்டிற்கான வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை அளித்துள்ள கோல்டன் ஏஜென்சீஸ், திருச்சிராப்பள்ளி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை இப்பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.562 நாள் 24.05.2021–ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் கோல்டன் ஏஜென்சீஸ், திருச்சிராப்பள்ளி என்ற நிறுவனத்தின் GSTIN/UIN: 33ANTPPS79M1ZS ஆகும். இந்த எண்ணில் 2020–2021 மற்றும் 2021–2022 அக்டோபர் வரை GST Filing செய்யப்பட்டுள்ளது என்பதையும் இதற்கான நகல்களையும் இத்துடன் இணைத்து சமர்ப்பித்துள்ளேன். மேலும் மேற்கண்ட பட்டியல்களுக்கு திருச்சிராப்பள்ளி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் பட்டியல் மேலொப்பம் பெறப்பட்டுள்ளது என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், கோல்டன் ஏஜென்சீஸ், திருச்சிராப்பள்ளி மற்ற இரண்டு GST No: 33AABPR2332P1ZM மற்றும் 33AIXPP0615P1ZN குறித்து இப்புகார் மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பேரூராட்சிக்கு தொடர்புடையது அல்ல என்பதையும், எனவே இதற்கு இவ்வலுவலகம் மூலம் விளக்கம் ஏதும் இல்லை என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கொரோனா காலங்களில் Lyzol கிருமிநாசினியை இப்பேரூராட்சி பகுதியில் உள்ள குடியிருப்பு வீடுகள், அரசு அலுவலகங்கள், மருத்துவமனைகள், பெட்ரோல் பங்குகள், தொட்டியம் வழியே செல்லும் பேருந்துகள், டேங்கர் லாரி மூலம் பேரூராட்சிக்குட்பட்ட அனைத்து தெருக்களிலும் மின்கல வாகனங்களில் ஸ்பிரேயர் மூலம் வீட்டின் முகப்பு, வங்கி, பொது மக்கள் கூடும் இடங்கள் ஆகிய பகுதிகளில் Lyzol கிருமிநாசினி தெளிக்கப்பட்டது என்பதையும் அதற்கான புகைப்பட பிரதிகளையும் சமர்ப்பித்துள்ளேன்.

எனவே, என்னால் மேலே குறிப்பிடப்பட்டவைகள் அனைத்தும் இவ்வலுவலக பதிவுகளின் படியே பணிந்து சமர்பிக்கப்பட்டுள்ளது என்பதையும் மனுதாரரால் தனது மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான தொட்டியம் பேரூராட்சி செயல் அலுவலரும் 06.02.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 25.01.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. எஸ். ராஜன் என்பவர் 06.02.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

"திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் தேர்வு நிலை பேரூராட்சியில் 23.03.2020 முதல் 02.09.2021 வரையில் கிருமிநாசினி (Lizol) கொள்முதல் செய்யப்பட்டதில் அரசு நிதி பெருமளவில் மோசடி செய்யப்பட்டது.

பேரூராட்சியால், Golden Agency, Trichy என்ற நிறுவனத்திடமிருந்து 4/2020 முதல் 9/2021 வரை கிருமி நாசினி கொள்முதல் செய்தது ரூ.12,29,741/– (இந்நிறுவனத்தின் முழு முகவரி மற்றும் GST எண் தெரிவிக்கப்படவில்லை) எனவும் V.V. Traders, காட்டூர், திருச்சி நிறுவனத்திடமிருந்து கிருமிநாசினி கொள்முதல் செய்தது ரூ.50,000/– (இந்நிறுவனத்தின் GST எண் அளிக்கப்படவில்லை) எனவும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் தகவல்கள் பெறப்பட்டது.

ஆனால், சென்னை, வணிகவரித் துறையின் இணை இயக்குநரின் ந.க. எண்.07/2021/அ3 நாள் 29.05.2023 நாளிட்ட அறிக்கையின்படி மேற்காண் நிறுவனங்கள் மூலம் 01.01.2019 முதல் 18.10.2021 வரை தொட்டியம் பேரூராட்சிக்கு லைசால் கிருமிநாசினி விற்பனை செய்யப்படவில்லை என தெரிய வருகிறது.

எனவே, போலியான நிறுவனங்கள் மூலம் கிருமிநாசினி கொள்முதல் செய்யப்பட்டும், அரசின் பெருமளவு நிதி கையாடல் செய்யப்பட்டும், போலியான GST மூலம் வரிஏய்ப்பும் பேரூராட்சியால் முறைகேடுகள் செய்துள்ளனர்.

மேலும், மேற்காணும் செலவினம் செய்ததாக பேரூராட்சியால் தெரிவிக்கும் செலவினத் தொகையின் விவரம் உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் பட்டியலில் காணப்படவில்லை என்பதால் முறைகேடுகள் நடைபெற்றுள்ளது.

ஆகவே, இதில் சம்பந்தப்பட்ட பேரூராட்சியின் அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

**6.** எதிர்மனுதாரரான தொட்டியம் பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி எஸ். இளவரசி என்பவர் 06.02.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

"திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் தேர்வு நிலை பேரூராட்சி பகுதியானது 15 வார்டுகளும் 102 தெருக்களும் கொண்டதாகும். இப்பகுதியில் கொடிய உயிர்கொல்லி கொரோனா வைரஸ் தொற்று பரவலை தடுத்து பொது மக்களை காத்திட சென்னை பேரூராட்சிகளின் இயக்குநரின் சுற்றறிக்கை ந.க. எண்.004/2020/இ3 நாள் 14.03.2020, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அரசாணை (நிலை) எண் 97 நாள் 15.03.2020 மற்றும் அரசாணை (நிலை) எண் 347 நாள் 16.03.2020 மற்றும் கடித எண் 01/CS/2020 நாள் 15.03.2020–ன்படி முறையே சுற்றறிக்கை, அரசாணைகள் மற்றும் கொரோனா வைரஸ் (Covid 19) தடுப்பு பணிகளை உள்ளாட்சி அமைப்புகள் உரிய கிருமிநாசினிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களுடன் தீவிரமாக மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

மேற்காணும் அறிவுரைகளுக்கிணங்க பேரூராட்சி மன்ற தீர்மானத்தின் (தீர்மான எண்.404 நாள் 24.03.2020)–படி கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காக Lyzol கிருமிநாசினி V.V. டிரேடர்ஸ், காட்டூர், திருச்சிராப்பள்ளி மற்றும் கோல்டன் ஏஜென்சீஸ், திருச்சிராப்பள்ளி என்ற நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, பேரூராட்சிக்குட்பட்ட குடியிருப்பு வீடுகள், அரசு அலுவலகங்கள், மருத்துவமனைகள், பெட்ரோல் பங்குகள், தொட்டியம் வழியாக செல்லும் பேருந்துகள்/டேங்கர் லாரிகள், மின்கல வாகனங்களில் ஸ்பிரேயர் மூலம் கிருமிநாசினி தெளிக்கப்பட்டது.

மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள வி. வி. டிரேடர்ஸ், காட்டூர் என்ற நிறுவனத்தின் GST No. GSTIN/UIN: 33BPAPS4342KIZU கடந்த 18.10.2018 முதல் நாளது வரை பயன்பாட்டில் உள்ளது.

மேலும் இப்பேரூராட்சிக்கு தேவையான பொது சுகாதாரப் பொருட்கள் சப்ளை செய்வதற்கு 2021–2022–ஆம் ஆண்டிற்கான வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தபுள்ளி விலை அளித்துள்ள கோல்டன்

ஏஜென்சீஸ், திருச்சிராப்பள்ளி எனற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை பேரூராட்சி தீர்மான எண்.562 நாள் 24.05.2021–ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் கோல்டன் ஏஜென்சிஸ் நிறுவனத்தின் GST No. GSTIN/UIN: 33ANTPP8793M1ZS ஆகும். இதே எண்ணில் 2020–21 மற்றும் 2021–22 அக்டோபர் வரை GST filing செய்யப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரரால் தெரிவிக்கப்படும் கோல்டன் ஏஜென்சிஸ் நிறுவனத்தில் இரண்டு GST No. 33 AABPR2332P1ZM மற்றும் 33 AIXPP0615P1ZU, இப்பேரூராட்சிக்கு தொடர்புடையது அல்ல.

மனுதாரர் தெரிவித்துள்ள மேற்காணும் செலவினங்கள் பேரூராட்சி இயல்புநிலை கணக்கு (Appropriate Accounts) Code எண்கள் 2101 மற்றும் 2107–இல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினங்களுக்கு திருச்சிராப்பள்ளி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் மேலொப்பம் பெறப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் தெரிவித்துள்ளவாறு நிதி முறைகேடுகள் நடைபெறவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான தொட்டியம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. S. ராஜன் என்பவர் தனது 26.10.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் கீழ்க்காணும் புகாரினை தெரிவித்துள்ளார்:

"தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல்களின்படி திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் தேர்வு நிலை பேரூராட்சியில் 23.03.2020 முதல் 02.09.2021 வரையிலான காலத்தில் லைசால் கிருமிநாசினியை, திருச்சி, கோல்டன் ஏஜன்சி மூலம் ரூ.12,29,741/– மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டதாக தெரிவிக்கும் பேரூராட்சியினர் அந்நிறுவனத்தின் முழு முகவரி மற்றும் GST எண் விவரம் தெரிவிக்கவில்லை. அதேபோன்று, திருச்சி, V.V. Traders மூலம் ரூ.50,000/– கொள்முதல் செய்யப்பட்டதாக தெரிவிக்கும் நிறுவனத்தின் GST எண் தெரிவிக்கப்படவில்லை. இதனால் போலியான ஆவணங்கள் மூலம் லைசால் கிருமிநாசினி கொள்முதல் செய்யப்பட்டு, பெரும் நிதி கையாடல் செய்யப்பட்டுள்ளது. மேலும் இச்செலவினங்களுக்குள்ளான பட்டியலில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடமும் மேலொப்பம் பெறப்படவில்லை. தவிர மேற்காணும் நிறுவனங்கள் மூலம் பேரூராட்சியால் லைசால் கிருமிநாசினி கொள்முதல் செய்யப்படவில்லை என்பதை 29.5.2023 நாளிட்ட திருச்சி, வணிகவரித் துறையின் இணை ஆணையரின் கடிதம் வாயிலாக தெரிய வருகிறது என்றும், மேலே தெரிவிக்கப்பட்டுள்ள செலவினத் தொகையின் விவரம் உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் பட்டியலிலும் காணப்படவில்லை எனவும் புகாராக தெரிவித்து, முறைகேடாக செயல்பட்ட சம்பந்தப்பட்ட பேரூராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்."

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 15 வார்டுகளில் 102 தெருக்கள் அமைந்துள்ள தொட்டியம் தேர்வு நிலை பேரூராட்சிகுட்பட்ட அனைத்து பகுதிகளிலும் கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்படாதிருக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநரின் சுற்றறிக்கைகள் ந.க. எண்.004/2020/இ3 நாள் 14.03.2020 மற்றும் 18.03.2020 மூலம் மற்றும் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்

துறையால் அவ்வப்போது வெளியிடப்பட்ட பல்வேறு அரசாணைகளின் மூலம் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

இதன் அடிப்படையில், கொரோனா வைரஸ் பரவலை தடுக்கும் வகையில் தொட்டியம் தேர்வுநிலை பேரூராட்சியின் அனைத்து தெருக்களிலும் கிருமிநாசினி மருந்து அடித்திடவும், இவற்றிக்கு பட்டியல் தொகை வழங்கிடவும் 24.3.2020 அன்றைய மன்றத் தீர்மானத்தில் (தீர்மான எண்.404) நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, பேரூராட்சி மன்றத்தால் தீர்மானத்தின் (தீர்மான எண்.562 நாள் 24.05.2021) மூலம் அங்கீகரிக்கப்பட்ட 2021–22 ஆம் ஆண்டிற்காக பொது சுகாதாரப் பொருட்கள் பேரூராட்சிக்கு சப்ளை செய்வதற்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை அளித்த திருச்சிராப்பள்ளி கோல்டன் ஏஜென்சீஸ் மூலம் 23.03.2020 முதல் 02.09.2021 வரையிலான காலத்தில் மொத்தம் ரூ.12,20,741/– மதிப்பீட்டில் லைசால் கிருமிநாசினி கொள்முதல் செய்யப்பட்டு, ஒப்பளிப்பு செய்யப்பட்ட பட்டியல் ரசீதில் திருச்சி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் மேலொப்பமும் (Counter signed) பெறப்பட்டுள்ளது என்பதை பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்த ஆவணங்கள் மற்றும் அவரது வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது. மேலும் கோல்டன் ஏஜென்சீஸின் GST No. GSTIN/UIN: 33ANTPP8793MIZS என்பதை பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்த GST தாக்கல் செய்துள்ள படிவங்களின் நகல்கள் மூலம் உறுதி செய்யப்படுகிறது. இந்நிலையில் மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தெரிவிக்கும் கோல்டன் ஏஜென்சீஸ் நிறுவனத்தின் இரண்டு GST எண்ணான GST No. 33 AABPR2332PIZM மற்றும் 33 AIXPP0615PIZN ஆகியவை தொட்டியம் தேர்வுநிலை பேரூராட்சிக்கு சம்பந்தப்பட்டவை இல்லை என்பதை செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், காட்டூர், V.V. டிரேடர்ஸ் மூலம் ரூ.50,000/– மதிப்பீட்டில் லைசால் கிருமிநாசினி பேரூராட்சியால் கொள்முதல் செய்யப்பட்டதை திருச்சி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் மேலொப்பமிட்ட பட்டியல் தொகையின் நகலினை செயல் அலுவலர் சமர்ப்பித்ததன் மூலமும், அவரது அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாகவும் தெரிய வருகிறது. தவிர V.V. டிரேடர்ஸ் நிறுவனத்தின் GST No. GSTIN/UIN: 33BPAPS4342KIZU என்பதை GST தாக்கல் செய்துள்ள படிவத்தின் மூலம் உறுதியாகிறது.

இந்நேர்வில் தெரிவிக்கப்பட்ட புகாரினையே மனுதாரர் திரு. S. ராஜன் என்பவரால் திருச்சி கோட்டம், வணிக வரித் துறை இணை ஆணையருக்கு புகார் மனு அளிக்கப்பட்டதின் அடிப்படையில், வணிக வரித் துறை இணை ஆணையர் தனது ந.க.3078/2022/அ3 01.12.2023 நாளிட்ட அறிவிப்பு கடிதத்தில், புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள வணிகரை பற்றிய GSTN, PAN போன்ற தகவல்கள் கோரப்பட்டதில், எவ்வித தகுந்த ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படாததால், புகாரில் காணும் வணிகரை இனம் கண்டறிய முடியாத சூழ்நிலை உருவாகி உள்ளதால், தங்கள் புகாரின் மீது மேல் நடவடிக்கை தொடர இயலவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பேரூராட்சி மன்றத்தில் ஒவ்வொரு மாத கூட்டத்திலும் செலவினங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது எனவும், மனுதாரர் முறையீட்டு மனுவில் தெரிவித்த செலவினங்களை பேரூராட்சி இயல்புநிலை கணக்கு (Appropriate Accounts) தலைப்புக் கணக்கு (Code No.) 2101 மற்றும் 2107–ல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

இருப்பினும், மனுதாரர் திரு. S. ராஜன் என்பவர் தனது 26.10.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் புகாராக தெரிவித்துள்ளபடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் தேர்வுநிலை பேரூராட்சியில் 23.3.2020 முதல் 02.09.2021 வரையிலான காலத்தில், புகார் மனுவில்

தெரிவிக்கப்பட்டுள்ள நிறுவனங்களிலிருந்து கிருமிநாசினி லைசால் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டதில் முறையாக கையாளப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்திடும் வகையிலும் விதிமுறைகள் பின்பற்றப்பட்டனவா என்பதைப் பற்றியும் உள்ளாட்சி நிதி சிறப்பு தணிக்கை மூலம் தணிக்கை செய்து, அறிக்கையினை 2 மாதக் காலத்திற்குள் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி தணிக்கை இயக்குநருக்கு பரிந்துரை செய்யலாம் என இம்முறை மன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. எஸ். ராஜன்,
3/2, நமச்சிவாய நகர் முதல் தெரு,
மண்ணச்சநல்லூர் வட்டம்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்–621 005.

2) செயல் அலுவலர்,
தொட்டியம் தேர்வுநிலை பேரூராட்சி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்

3) இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,
571, அண்ணா சாலை,
நந்தனம்,
சென்னை–600 035.

4) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

5) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

11/4/25
செயலாளர்.
11/4/25

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032